சுருக்கம்

பொதுப்பணிகள் – இந்து சமய அறநிலையத்துறை – கருணையடிப்படையில் பணிநியமனம் – திருமதி.ஆர்.சங்கீதா, இளநிலை உதவியாளர், உதவி ஆணையர் அலுவலகம், பரமக்குடி – பணி வரன்முறை செய்தல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் (அ.நி 2–1)த் துறை

அரசாணை (2ப) எண்.8

நாள்:29.07.2020
சார்வரி, ஆடி – 14
திருவள்ளுவராண்டு–2051

படிக்கப்பட்டவை:

1. அரசாணை(நிலை) எண்.100, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத்துறை, நாள் 01.08.2018.
2. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத்துறை, நாள் 23.01.2020.
3. இந்து சமய அறநிலையத்துறை ஆணையரது கடித ந.க. எண்.22787/2015/பி3, நாள் 13.02.2020.

******

ஆணை:

இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் அவர்கள் மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், பரமக்குடி, உதவி ஆணையர் பிரிவிற்குட்பட்ட திருப்பத்தூர் சரக ஆய்வராகப் பணிபுரியும்போது 05.12.2014 அன்று காலமான அரசு ஊழியர் அமரர் திரு.மு.ரவி, என்பவரின் மகள் திருமதி.ஆர்.சங்கீதா என்பவருக்கு கருணை அடிப்படையில் பரமக்குடி, உதவி ஆணையர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் வழங்கப்பட்டு, 25.05.2017 முற்பகல் முதல் பணியில் சேர்ந்து பணிபுரிந்து வருவதாக தெரிவித்துள்ளார். திருமதி.ஆர்.சங்கீதா, மார்ச் 2009–ல் பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்றுள்ளார். இவர் பிறந்த தேதி 25.01.1994. அன்னாருக்கு பணிநியமனம் வழங்கப்பட்டபோது வயது மற்றும் கல்வித் தகுதி உள்ளிட்ட அனைத்து தகுதிகளையும் பெற்றுள்ளார் எனத் தெரிவித்து, அன்னார் இளநிலை உதவியாளராகப் பணியேற்ற நாளான 25.05.2017 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணை பிறப்பிக்குமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

2. மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்டவர்களின் பணியினை வரன்முறைப்படுத்துவதற்கு தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின் இசைவினை பெறுவதிலிருந்து விலக்களித்து ஆணையிடப்பட்டுள்ளது.

..2..

3. மேற்குறிப்பிடப்பட்டுள்ள நிலையில், திருமதி.ஆர்.சங்கீதா, தமிழ்நாடு அமைச் பணியில் இந்து சமய அறநிலையத்துறையில் உதவி ஆணையர் அலுவலகத்தில் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் செய்யப்பட்டு, அவர் பணியி சேர்ந்த நாளான 25.05.2017 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில், அப்பதவிக்கு உடல் தகுதியை பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு, பணி வரன்முறை செய் அரசு ஆணையிடுகிறது.

4. இவ்வாறு முன்னிட்டு பணி வரன்முறை செய்யப்படுவதால், ஊதிய உயர்வுக நிலுவைத் தொகைகள் ஏதுமிருப்பின் அவற்றைப் பெற விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

5. இவ்வரசாணை தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத்துறையின் அலுவல் சார்ப எண்.7453/க்யூ–1/2020–1, நாள்.20.07.2020–ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

விக்ரம் கபூர்
அரசு கூடுதல் தலைமைச் செயலாள

பெறுநர்
திருமதி.ஆர்.சங்கீதா, இளநிலை உதவியாளர்,
(முதன்மைச் செயலாளர் / ஆணையர் (மு.கூ.பொ.),
இந்து சமய அறநிலையத்துறை வழியாக)
முதன்மைச் செயலாளர் / ஆணையர் (மு.கூ.பொ.),
இந்து சமய அறநிலையத்துறை, சென்னை–34.

நகல்:-
மாநில கணக்காய்வுத் தலைவர், சென்னை–18.
மாவட்ட கருவூல அலுவலர், இராமநாதபுரம்.
தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்பு (க்யூ1)த் துறை, சென்னை–9
பணியாளர் மற்றும் நிருவாக சீர்திருத்தத்துறை, சென்னை–9
செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை–3.
அரசு கூடுதல் தலைமைச் செயலாளரின் முதுநிலை தனிச் செயலர்,சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்